# வரைவு துணை விதிகள்
# சென்னை மாநகராட்சி வகுப்பு IVக்கான பணிகளின் துணை விதிகள், 2009

| வ. எண் | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ண யிக்கப் படும் தகுதிகள் | ஊதிய விகிதம் மற்றும் நிர்ணய நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | **அலுவலக உதவியாளர்** | 1. பணிக் காலத்தில் காலஞ்சென்றவர்களின் வாரிசு தாரர்களை நியமனம் செய்தல்<br><br>2. பணியமைப்பில் உள்ள தொழிலாளர் வகையிலிருந்து பதவி வகைமாற்றம் மூலம் நியமனம்<br><br>3. நேரடியாக நியமனம் செய்தல் | 8ம் வகுப்பு தேர்ச்சி | <u>நடைமுறையில் உள்ளது</u><br>ரூ.2550–55–2660–60–3200<br><br><u>திருத்தப்பட்டது</u><br>ரூ.4800–10000 + நிலை ஊதியம் ரூ.1300<br><u>நிர்ணய நாள்</u><br>ஒவ்வோர் ஆண்டும் ஜூலை முதல் நாள் | 3ம் கலத்தில்<br>இனம் 1 மற்றும் 2ல் நியமனம் செய்யப்பட எவரும் இல்லாத நிகழ்வுகளில் மட்டுமே நேரடி நியமனங்கள் செய்யப்பட வேண்டும். |
| 2 | **தொழிலாளிகள்** | 1. பணிக்காலத்தில் காலஞ்சென்றவர்களின் வாரிசு தாரர்களை நியமனம் செய்தல்<br><br>2. நேரடியாக நியமனம் செய்தல் | தமிழில் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும் | <u>நடைமுறையில் உள்ளது</u><br>ரூ.2550–55–2660–60–3200<br><br><u>திருத்தப்பட்டது</u><br>ரூ.4800–10000 + நிலை ஊதியம் ரூ.1300<br><br><u>நிர்ணய நாள்</u><br>ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் முதல் நாள் | 1. 3ம் கலத்தில் இனம் 1ல் நியமனம் செய்யப்பட எவரும் இல்லாத நிகழ்வுகளில் மட்டுமே நேரடி நியமனங்கள் செய்யப்பட வேண்டும்<br>2. தொழிலாளி பதவி பொதுவான வகையில் வருகிறது மேலும் தொழிலாளிகள் பல்வேறு பணிகளைச் செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு ஏற்றவாறு அழைக்கப்படுவர்<br><u>விளக்கம்:</u><br>1. சாலைப்பணிகளை செய்ய நியமிக்கப் பட்டுள்ள தொழிலாளிகள் சாலைத் தொழிலாளிகள் என்று அழைக்கப்படுவர்.<br><br>2. மழைநீர் வடிகால் துறையில் நியமிக்கப்பட்ட தொழிலாளிகள் தூர்வாரும் தொழிலாளிகள் என்று அழைக்கப்படுவர்.<br>3. சுகாதாரத் துறையின் மலேரியா பிரிவில் நியமிக்கப்பட்ட தொழிலாளிகள் மலேரியா தொழிலாளிகள் என்று அழைக்கப்படுவர்.<br>4. மின்துறையில் நியமிக்கப்பட்ட தொழிலாளிகள் மின்துறை தொழிலாளிகள் என்று அழைக்கப்படுவர்.<br><br>5. துப்புரவு துறையில் நியமிக்கப்பட்ட தொழிலாளிகள் துப்புரவு பணியாளர்கள் என்று அழைக்கப்படுவர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | **6.** வாகன நிலையங்களில் நியமிக்கப்பட்டுள்ள தொழிலாளிகள் துலக்குநர்கள் என்று அழைக்கப்படுவர்.<br><br>**7.** தபால் பணிகளை செய்ய பணிக்கப்பட்டுள்ள தொழிலாளிகள் தபால் லஸ்கர்கள் என்று அழைக்கப்படுவர்.<br><br>**8.** வண்ணான் துறைகளில் பணியாற்றும் தொழிலாளிகள் துப்புரவு பணியாளர்கள் என்று அழைக்கப்படுவர்.<br><br>**9.** பூங்காக்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பூங்கா தொழிலாளிகள் என்று அழைக்கப்படுவர்.<br><br>**10.** மாநகராட்சி மருத்துவமனை களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மருத்துவமனை தொழிலாளிகள் என்று அழைக்கப்படுவர். அரங்க உதவியாளர், தூக்கும் படுக்கை சுமக்கும் பெண், பெண் பிரிவு வார்டு உதவியாளர், ஆண் பிரிவு வார்டு உதவியாளர்,பெண் உதவியாளர், ஆயா, பெண் துப்புரவு பணியாளர், சலவையாளர், ஆண் கூலி, பெண் கூலி, ஆய்வுகூட தொழிலாளி, சமையலறை தொழிலாளி, போன்ற பதவிகள் உட்பட மேற்குறிப்பிட்ட வகைத் தொழிலாளிகள் அனைவரும் எல்லா விதத்திலும் சமமானவர்கள்; துறைகளுக்கிடையே பணிமாற்றம் செய்யப்பட வேண்டியவர்கள் |